பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

25 06 2025 12 40

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. அரசியல் சாசன மாண்புகளை வலுப்படுத்த மத்திய அரசு உறுதியுடன் செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. காங்கிரஸ் தனது அதிகார வேட்கையை பூர்த்தி செய்ய அவசர நிலை என்ற அநீதியை கொண்டு வந்ததாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

3. இந்திய விண்வெளி வீரர் திரு சுபான்சு சுக்லா இன்று 4 விண்வெளி வீரர்களுடன் நாசாவின் ஆக்ஸியம் 4 என்ற விண்கலம் மூலம் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு புறப்பட்டு சென்றனர்.

4. அடுத்த மூன்றாண்டுகளில் இந்தியாவை 5 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக உயர்த்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

5. சீனாவில் இன்று தொடங்கும் ஷாங்காய் ஒத்துழைப்பு பாதுகாப்புத் துறை அமைச்சர்கள் மாநாட்டில் மத்திய அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் தலைமையிலான உயர்மட்டக் குழுவினர் பங்கேற்றுள்ளனர்.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

நாட்டில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டு இன்றுடன் 50 ஆண்டுகள் நிறைவடைகிறது.

இந்நாள் அரசியல் சாசன படுகொலை தினமாக **கடைபிடிக்கப்பட்டு வருகிறது**.

**அவசர நிலைக்கு எதிராக போராடியவர்களுக்கு இந்நாளில் வீர வணக்கம் செலுத்துவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்**.

**அவர் வெளியிட்டுள்ள சமுக வலைதள பதிவில் நாட்டின் ஜ நாயக வரலாற்றில்** 50 **ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட இருண்ட அத்தியாயங்கள் குறித்த விழிப்புணர்வு மக்களிடையே இந்நாளில் ஏற்படுத்தப்படுவதாக கூறியுள்ளார்**.

**நாட்டின் பெருமைமிகு அரசியல் சாச மாண்புகளை புறந்தள்ளும் வகையிலும் அடிப்படை உரிமைகளை பறிக்கும் வகையிலும் அவசர நிலை பிரகட ப்படுத்தப் பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்**

பல அரசியல் தலைவர்கள் சமூக சீர்திருத்தவாதிகள் மாணவர்கள் நாட்டின் குடிமக்கள் ஆகியோரின் உரிமைகளை பறித்து சிறையில் அடைக்கப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

பத்திரிக்கை சுதந்திரம் முற்றிலும் பறிக்கப் பட்டதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்

நாட்டின் பல தரப்பு மக்களும் வெவ்வேறு கொள்கைகளையும் நம்பிக்கைகளையும் கொண்டு இருந்தாலும் அரசியல் சாசனத்தை பாதுகாக்க வேண்டும் என்ற ஒருமித்த உணர்வோடு போராடியதாகவும் அவர் கூறினார்.

இந்த போராட்டத்தில் நாட்டின் சுதந்திர போராட்ட வீரர்களும் தங்களை அர்பணித்துள்ளாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்

மக்களின் எழுச்சி காரணமாக தேர்தலை அறிவித்த அப்போதைய காங்கிரஸ் அரசு அந்த தேர்தலில் மோசமான தோல்வியை சந்தித்ததையும் பிரதமர் சுட்டிக்காட்டி உள்ளார்

அரசியல் சாசன மாண்புகளை வலுப்படுத்த வேண்டும் என்ற கொள்கையோடு மத்திய அரசு உறுதியுடன் செயல்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

வளர்ச்சி அடைந்த பாரதம் என்ற இலக்கை எட்ட வேண்டும் என்ற ஒரே சிந்தனையோடு ஒட்டு மொத்த நாட்டு மக்களும் ஓரணியில் திரண்டு இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொருளாதார வளர்ச்சியில் புதிய உச்சத்தை எட்டுவதற்கு நம்பிக்கையோடு தாம் செயல்பட்டு வருவதாக தெரிவித்த பிரதமர் ஏழை எளிய நலிவுற்ற மக்களின் கனவுகளை பூர்த்தி செய்யும் பணியை மத்திய அரசு செய்து வருவதாகவும் பிரதமர் திரு நரேந்திர மோடி தமது வலைதள பதிவில் கூறியுள்ளார்.

>><><><><<

காங்கிரஸ் கட்சி தனது அதிகார வேட்கையை பூர்த்தி செய்வதற்காக அவசர நிலை என்ற அநீதியை கொண்டு வந்ததாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

அரசியல் சாசன படுகொலை தினம் இன்று கடைபிடிக்கப்படுவதை ஒட்டி அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், அவசர நிலை நாட்டின் அத்தியாவசிய தேவையாக இருக்கவில்லை என்றும் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த ஒரு தனிநபரின் ஜனநாயகத்திற்கு எதிரான சிந்தனையை நடைமுறைப்படுத்துவதற்காக கொண்டு வரப்பட்டது என்றும் கூறியுள்ளார்.

அவசர நிலையின் போது பத்திரிகை சுதந்திரம் பாதிக்கப்பட்டதாகவும் நீதிமன்றத்தின் கைகள் கட்டப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சமூக செயற்பாட்டாளர்கள் சிறையில் அடைக்கப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

**>><><><><<**

அவசர நிலைக்கு எதிரான போராட்டத்தில் தம்மையே அர்ப்பணித்தவர்களுக்கு புகழஞ்சலி செலுத்திய திரு அமித் ஷா அவசர நிலை மக்களுக்கு தீராத வலியையும் வேதனையையும் ஏற்படுத்தியதாகவும் அவர் கூறியுள்ளார். வரும் தலைமுறையினர் இதனை நன்கு புரிந்து கொண்டுள்ளதாகவும் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

**>><><><><<**

சீனாவின் ஹைபே-னயடி-வில் இன்று தொடங்கும் ஷாங்காய் ஒத்துழைப்பு பாதுகாப்புத் துறை அமைச்சர்கள் மாநாட்டில் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தலைமையிலான உயர்மட்ட இந்திய குழுவினர் பங்கேற்க உள்ளனர்.

இதுதொடர்பாக திரு ராஜ்நாத் சிங் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் ஷாங்காய் உறுப்பு நாடுகளின் இதர அமைச்சர்களுடன் உலகளாவிய மற்றும் மண்டல அளவிலான பாதுகாப்பு விஷயங்கள் குறித்து விரிவான விவாதம் நடத்தப்படவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

உலகளாவிய அமைதி மற்றும் பாதுகாப்பு குறித்த இந்தியாவின் தொலைநோக்கு பார்வை என்ற தலைப்பில் தாம் அறிக்கை ஒன்றை இம்மாநாட்டில் சமர்ப்பிக்க இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

தீவிரவாதத்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்வதில்லை என்ற உறுதியான நிலைப்பாட்டையும் ஷாங்காய் தலைவர்களிடம் இந்தியா எடுத்துரைக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

**>><><><><<**

இந்திய விண்வெளி வீரர் திரு சுபான்சு சுக்லா இன்று நான்கு விண்வெளி வீரர்களுடன் ஆக்ஸியம் 4 விண்கலம் மூலம் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு புறப்பட்டுச் சென்றனர்.

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்திலிருந்து ஃபால்கன் 9 ராக்கெட் மூலம் இந்த விண்கலம் செலுத்தப்பட்டது.

இன்னும் 28 மணிநேரத்தில் அவர்கள் சர்வதேச விண்வெளி ஆய்வு நிலையத்தை அடைவார்கள் என்று நாசா தெரிவித்துள்ளது.

அந்த காலக்கட்டத்திற்குள் அவர்களுக்கு 8 மணிநேரம் ஓய்வு அளிக்கப்பட்டு, உணவு அளிக்கப்படும் என்றும் நாசா தெரிவித்துள்ளது.

இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின் சார்பாக திரு சுபான்சு சுக்லா நுண்ணுயிர் கிருமிகள் குறித்தும் விண்வெளியில் உயிரி தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளவுள்ளதாகவும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் கூறியுள்ளது.

14 நாட்கள் விண்வெளியில் தங்கியிருக்கும் போது சுமார் 60 க்கும் மேற்பட்ட ஆய்வுகளை அவர்கள் மேற்கொள்ளவுள்ளதாக அந்த நிறுவனம் கூறியுள்ளது.

**>><><><><<**

அடுத்த மூன்று ஆண்டுகளில் இந்தியாவை 5 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

வரும் 2027 ஆம் ஆண்டிற்குள் இந்தியா உலகின் 3 ஆவது பெரிய பொருளாதாரமாக வலுப்பெறும் என்றும் தெரிவித்தார்.

இந்த இலக்குகளை எட்டுவதற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசுடன் தொழில் மற்றும் வர்த்தக சமுதாயமும் நாட்டின் 140 கோடி மக்களும் இணைந்து செயல்பட வேண்டும் என்று அவர் கூறினார்.

புதுதில்லியில் இன்று தொழில் வர்த்தக சபை ஏற்பாடு செய்திருந்த இணைய தள கருத்தரங்கில் உரையாற்றிய அவர், இந்திய பொருளாதாரம் 5 டிரில்லியன் டாலர் என்ற இலக்கை எட்டுவதற்கு தேவையான வலிமையான அடித்தளத்தை கொண்டுள்ளதாகவும் திரு பியூஷ் கோயல் தெரிவித்தார்.

**>><><><><<**

இந்திய தர நிர்ணய கழகம் சார்பில் பள்ளி ஆசிரியர்களுக்கான தர நிலைகள் குறித்த அறிவியல் கற்றல் பயிற்சி இன்று கள்ளக்குறிச்சியில் உள்ள தனியார் பொறியியல் கல்லூரியில் நடைபெற்றது.

இந்த பயிற்சி மூலம் தங்களுக்கு பல தகவல்கள் கிடைத்துள்ளதாக கல்லூரி பேராசிரியர்கள் திருமதி ஜூலின் ஜெயகுமாரி, திரு மணிமாறன் ஆகியோர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

>><><><><<

**தமிழக கடலோர பகுதிகளில் தீவிரவாத ஊடுருவலை தடுக்கும் வகையில் பாதுகாப்பு ஒத்திகை இன்றும் நாளையும் நடைபெறுகிறது**

**நாகை கன்னியாகுமாரி தூத்துக்குடி உள்ளிட்ட பகுதிகளில் இந்த ஒத்திகை நடைபெற்று வருகிறது**

**நாகை மாவட்டத்தில் வேதாரண்யம் ஆற்காட்டுத்துறை அக்கரைப்பேட்டை உள்ளிட்ட பகுதிகளில் சி விஜில் பாதுகாப்பு ஒத்திகை நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.**

>><><><><<

விளையாட்டுச் செய்திகள்-1

புவனேஸ்வரில் நடைபெற்ற தேசிய நீச்சல் சாம்பியன் போட்டியில் கர்நாடகாவின் சுரதரடய புதிய தேசிய சாதனை படைத்துள்ளார்.

இப்போட்டியின் மகளிர் 50 மீட்டர் ஃப்ரீ ஸ்டைல் பிரிவில் சுரதரடய 26 புள்ளி மூன்று ஆறு வினாடிகளில் நீந்தி இந்த சாதனையைப் படைத்துள்ளார்.

மகளிர் ஆயிரத்து 500 மீட்டர் ஃப்ரீ ஸ்டைல் பிரிவில் ஞாயஎலய ளுயஉானநஎய தங்கப்பதக்கம் வென்றார்.

ஒடிசாவின் சிருஷ்டி உபாத்யாயா வெண்கலப் பதக்கம் வென்றார்.

இப்போட்டியின் ஆடவர் 400 மீட்டர் ஃப்ரீ ஸ்டைல் பிரிவில் ஆர்யன் நெஹ்ரா தங்கப் பதக்கத்தை வென்றார்.

இதே பிரிவில் முரளாயபசய சுயறயவ வெள்ளிப் பதக்கதையும், ளுநேநளா பூடிறனய வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.

தமிழகத்தின் ஸ்ரீஹரி நட்ராஜ் மற்றும் சஜ்ஜன் பிரகாஷ் ஆகியோர் 400 மீட்டர் தொடர் போட்டியில் புதிய சாதனை படைத்துள்ளனர்.

>> End of News <<